# *தமிழ் தேசிய மாவீரர் எழுச்சி நாள் 2019*

தமிழ் இனத்துக்காய், எம் மண்ணுக்காய் பல கனவுகளோடு சாவினைத் தழுவிய எம் மாவீரச் செல்வங்களை நினைவில் நிறுத்தும் பொன்நாள்.

## நியூசிலாந்து வெலிங்டன் ஒருங்கிணைப்பு தமிழ்க்குழுவினூடாக ரன்விச் பாடசாலை மண்டபத்தில் மாலை 7.00 மணியளவில் நூற்றுக்கும் மேற்பட்ட தமிழ்மண் உணர்வுமிக்க மக்களோடு நிகழ்வுகள் ஆரம்பிக்கப்பட்டது.

முதல் நிகழ்வாக மணியோசை ஒலிபெருக்கியில் ஒலிக்கப்பட்டு அதனைத் தொடர்ந்து 2 நிமிட அகவணக்கமும் பின் பொது ஈகைச்சுடர் மேஜர் முல்லைமணியின் அன்புச் சகோதரன் திரு சதாசிவம் ஏற்ற அதனைத் தொடர்ந்து மற்றைய மாவீரர்களின் உருவப் படங்களுக்கும் நினைவுக் கல்லறைகளுக்கும் சுடரேற்றப்பட்டது, அப்போது மாவீரர் நினைவுப்பாடல் ஒலிக்கப்பட்டது. பின் லெப்டினன்ட்.சங்கர் அவர்களின் திருவுருவ நினைவுக்கல்லறைக்கு திருமதி ரங்கநாதன், திரு அன்ரன், திரு சதாசிவம் அகியோர்களால் மலர்மாலை அணிவிக்கப்பட்டது, தொடர்ந்து மாவீரச் செல்வங்களை நெஞ்சில் நிறுத்தி தூபிகளுக்கும் திருவுருவப் படங்களுக்கும் அனைவராலும் மலரஞ்சலி செலுத்தப்பட்டது. அதற்குப் பின் தொடர்ந்து மாவீரர் பாடல்கள் திரையில் காண்பிக்கப்பட்டது. அதனையடுத்து இளையோர்களுடன் உரையாடல் இடம்பெற்றது. இதனை முன்னின்று ந.மாலதி, திருமதி விக்கி சுமதி, திருமதி அல்பிறேட் ஜனனி, திருமதி சசிக்குமார் ஜெயா இவர்களால் உணர்வுபூர்வமாக தங்கள் சகோதர்கள், நெருங்கிய உறவினர்கள், நண்பர்கள் பற்றிய நினைவலைகளை தங்கள் கருத்துப்பரிமாற்றமாக பகிர்ந்து கொண்டார்கள். அதன்பின் திரு றொபேட் அவர்கள் தமிழ் பற்றியும், தமிழீழ உணர்வு பற்றியும், எந்தக் சூழலில் வாழ்ந்தாலும் நம் மொழிக்கும், கலாச்சாரத்திற்கும் முக்கிய இடமளிக்க வேண்டும் என்றும் ஒரே இலட்சியத்திற்காய் ஒன்றிணைந்து செயற்படுவோம் எனும் தலைப்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் உரையாடலும் விழுதெறியும் வேர்கள் எனும் தலைப்பில் கவிதையும் கூறினார். தொடர்ந்து மாணவி கஜானி சதாசிவம் அவர்களால் தம் தமிழ் சொந்தங்களையும் உறவுகளையும் விட்டுப்பிரிந்து வாழ்வதன் வலியையும் உண்மையான அர்த்தத்தையும் தனது மனக்குமுறல்களை மிக உருக்கமாக வெளிப்படுத்தினார். இத்துடன் மாவீரச் செல்வங்களின் தமிழ் தேசியநாள் வலிகள் சுமந்த நாளாக, தமிழீழ உணர்வு சுமந்த நினைவலைகளோடு மிக அமைதியாக இரவு 9.30 மணியளவில் நிறைவு பெற்றது.

## குறிப்பு:-

இந்த வருடம் முதல் முறையாக நியூசிலாந்து வெலிங்டனில் சில ஈழத்தன் ஆர்வலர்களால் 50 ற்கும் மேற்பட்ட நினைவுக் கல்லறைகள் செய்து வைக்கப்பட்டது.

நன்றி

களத்திலிருந்து செய்திகளுக்காக

ந.அ.ஜசி